සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2016 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2016 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2016

සාමාන්‍ය පොදු පරීක්ෂණය
பொதுச் சாதாரணப் பரீட்சை
Common General Test

**12 T**

පැය දෙකයි මිනිත්තු තිහයි
இரண்டு மணித்தியாலமும் முப்பது நிமிடமும்
*Two hours and thirty minutes*

**கவனிக்க:**

* இவ்வினாத்தாளைப் பக்க இலக்கங்களுக்கமைய ஒழுங்குபடுத்துக.
* **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
* **கணிப்பானைப் பயன்படுத்தக்கூடாது.**
* விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாகப் பின்பற்றுக.
* **1** தொடக்கம் **60** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (X) இடுக.**

**1.** 2016 ஆம் ஆண்டில் ICC இருபது - 20 உலகக் கிண்ணக் கிறிக்கெற்றுப் போட்டித் தொடரில் வென்றது
(1) இங்கிலாந்து (2) மேற்கு இந்தியத் தீவுகள் (3) இந்தியா
(4) இலங்கை (5) அவுஸ்திரேலியா

**2.** காலஞ்சென்ற திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்காவின் 100ஆவது பிறந்த நூற்றாண்டு 2016 ஏப்பிரில் 17ஆந் திகதி அனுட்டிக்கப்பட்டது. அவர்
(1) உலகின் முதலாவது பெண் பிரதமர் ஆவார். (2) உலகின் முதலாவது பெண் சனாதிபதி ஆவார்.
(3) இலங்கையின் முதலாவது சனாதிபதி ஆவார். (4) இலங்கையின் முதலாவது பிரதமர் ஆவார்.
(5) இலங்கைப் பாராளுமன்றத்தின் முதற் பெண் சபாநாயகர் ஆவார்.

**3.** இலங்கையின் பிரசித்திபெற்ற குடிசார் பொறியியலாளரும் கண்டுபிடிப்பாளருமான ஒருவரின் பிறந்த தினமாகிய ஒக்ரோபர் 26 ஆந் திகதியை இலங்கையின் புதிய கண்டுபிடிப்பாளர் தினமாகப் பிரகடனப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இவர் யார் ?
(1) சீ. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா (2) டீ. ஜே. விமலசுரேந்திரா (3) ஏ. என். எஸ். குலசிங்கா
(4) உபாலி விஜேவர்த்தனா (5) ஜெப்றி பாவா

**4.** இலங்கைக்கு ஒரு புதிய அரசியலமைப்பை வரைவதற்காக 2016 ஏப்பிரில் மாதத்தில் இலங்கைப் பாராளுமன்றம் ஓர் அரசியலமைப்புச் சபையாகக் கூட்டப்பட்டது. இச்சபையின் தவிசாளர்
(1) பிரதமர் (2) பாராளுமன்றத்தின் சபாநாயகர் (3) நீதி அமைச்சர்
(4) பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் (5) பாராளுமன்றத்தின் எதிர்க் கட்சித் தலைவர்

**5.** 2016 பெப்புருவரி மாதத்தில் செயித் ராத் அல் ஹுசேன் அரசகுமாரர் ஐக்கிய நாடுகள் (UN) சபையின் உத்தியோகபூர்வ அந்தஸ்தில் இலங்கைக்கு விஜயஞ் செய்தார். அவர்
(1) மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் சபை உயர் ஆணையாளர்
(2) அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபை உயர் ஆணையாளர்
(3) பூகோளக் கல்விக்கான ஐக்கிய நாடுகள் சபையின் விசேட தூதுவர்
(4) இளைஞர்களையும் விளையாட்டுகளையும் பற்றிய ஐக்கிய நாடுகள் சபையின் விசேட தூதுவர்
(5) ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர்

**6.** XII ஆவது தெற்காசிய விளையாட்டு விழா 2016 பெப்புருவரி மாதத்தில் நடைபெற்றது. அது நடைபெற்ற நாடு
(1) நேபாளம் (2) பாகிஸ்தான் (3) இலங்கை (4) பங்களாதேஷ் (5) இந்தியா

**7.** ஐக்கிய அமெரிக்க அரசுகளின் ஒரு சிரேட்ட அரசாங்கப் பிரதிநிதியாகிய ஜோன் கெரி இரு நாடுகளுக்குமிடையே உள்ள தொடர்புகளைப் புதுப்பிப்பதற்காக 2015 மே மாதத்தில் இலங்கைக்கு வந்தார். அவர் அவ்வாறு இலங்கைக்கு ஐக்கிய அமெரிக்க அரசுகள் அரசாங்கத்தின் என்ன அந்தஸ்தில் வந்தார் ?
(1) இராஜாங்கச் செயலாளர் (2) திறைசேரியின் செயலாளர் (3) பாதுகாப்புச் செயலாளர்
(4) விவசாயச் செயலாளர் (5) தொழிற் செயலாளர்

**8.** 2015 ஓகஸ்ற் மாதத்தில் இலங்கையின் சனாதிபதியினால் ஓய்வுபெற்ற ரெஸ்ற் கிறிக்கெற் விளையாட்டு வீரர் ஒருவர் தேசிய அபாயப் போதைப்பொருள் கட்டுப்பாட்டுச் சபையில் வியாபாரக்குறித் தூதுவராக நியமிக்கப்பட்டார். அவர் யார் ?
(1) ரொஷான் மகாநாம (2) மஹேல ஜயவர்த்தன (3) சனத் ஜயசூரிய
(4) குமார் சங்கக்காரா (5) துலிப் மெண்டிஸ்

tamilguru.lk

**9.** சீக்கா (Zika) வைரசின் பரவல் ஒரு துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டிய சர்வதேச கரிசனைக்கு உட்பட்ட மக்கள் சுகாதாரம் தொடர்பான அவசர நிலை என 2016 பெப்புருவரியில் உலக சுகாதார தாபனம் (WHO) பிரகடனப்படுத்தியது. மனிதர்களை இவ்வைரசு தொற்றுவது

(1) தொற்று ஏற்பட்ட நுளம்புகளின் மூலம் (2) அழுக்கான மேற்பரப்பைத் தொடும்போது
(3) பருகும் நீரினூடாக (4) மாசடைந்த பாற் பண்ணைப் பொருள்களினூடாக
(5) உணவினூடாக

**10.** பின்வரும் நோய்களில் எது வக்சினேற்றத்தினால் தடுக்கப்பட **முடியாதது** ?

(1) விசர் நாய்க்கடி நோய் (2) கொப்புளிப்பான் (3) நீரிழிவு நோய் (4) போலியோ (5) சின்னமுத்து

**11.** ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) தலைமை அலுவலகம் இருக்கும் இடம்

(1) பிலிப்பைன் (2) இந்தோனேசியா (3) தாய்லாந்து (4) இந்தியா (5) யப்பான்

**12.** பூகோள இளைஞர் புகையிலை மதிப்பீடு (GYTS) என்பது பாடசாலைப் பிள்ளைகளிடையே புகையிலையின் பயன்பாட்டைக் கண்காணிப்பதற்காக உலக நாடுகளில் நடத்தப்படும் பாடசாலை மட்டக் கணிப்பீடாகும். 2015 இல் இலங்கையில் கல்வி அமைச்சினதும் சுகாதார அமைச்சினதும் ஒத்துழைப்புடன் GYTS நடத்தப்பட்டது. GYTS ஐத் தொடக்கியது

(1) சர்வதேச நாணய நிதியம் (IMF)
(2) ஐக்கிய நாடுகள் கல்வி, விஞ்ஞான, கலாசார சபை (UNESCO)
(3) உலக சுகாதாரத் தாபனம் (WHO)
(4) சர்வதேச தொழில் தாபனம் (ILO)
(5) ஐக்கிய நாடுகள் கைத்தொழில் அபிவிருத்திச் சபை (UNIDO)

More Past Papers at
tamilguru.lk

**13.** இலங்கையில் அமைக்கப்பட்ட முதற் சபாரிப் பூங்கா 2016 மார்ச் மாதத்தில் திறக்கப்பட்டது. அது இருக்கும் இடம்

(1) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ரிதியாகம (2) புத்தளம் மாவட்டத்தில் கற்பிட்டி
(3) கேகாலை மாவட்டத்தில் பின்னவல (4) பொலன்னறுவை மாவட்டத்தில் மின்னேரியா
(5) யாழ்ப்பாண மாவட்டத்தில் நெடுந்தீவு

**14.** அமெரிக்க டொலர், யூரோ, பிரித்தானிய பவுண், யப்பானிய யென் என்னும் நான்கு நாணய வகைகளுக்கு மேலதிகமாக உலகின் உன்னத நாணயங்களில் ஒரு நாணயமாக ஒரு புதிய நாணயம் சர்வதேச நாணய நிதியத்தினால் அண்மையில் அறிமுகஞ் செய்யப்பட்டது. இந்நாணயத்தின் பெயர் யாது ?

(1) சீன றென்மின்பி (2) சீன யுவான் (3) சவுதி டினார் (4) பிலிப்பீன் பெசோ (5) ருசிய ரூபிள்

**15.** "கல்வி நிறுவகங்களில் பகிடிவதையையும் வேறு வடிவத்திலான வன்முறைகளையும் தடைசெய்வதற்கான 1998 இன் 20 ஆம் இலக்கச் சட்டம்" பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இச்சட்டத்திற்கேற்ப பின்வருவனவற்றில் எது ஒரு தண்டிக்கத்தக்க தவறாகக் **கருதப்படுவதில்லை** ?

(1) ஒரு கல்வி நிறுவகத்தினுள்ளே அல்லது அதற்கு வெளியே பகிடிவதையை நிகழ்த்தல் அல்லது பகிடிவதையில் பங்குபற்றல்
(2) பகிடிவதையை நிகழ்த்தும் அதே வேளை கல்வி நிறுவகமொன்றின் ஒரு மாணவனுக்கு அல்லது பணியாளர் குழுவின் ஓர் உறுப்பினருக்குப் பால்முறைத் தொந்தரவை அல்லது கடும் காயத்தை ஏற்படுத்தல்
(3) ஒரு மாணவனின் அல்லது பணியாளர் குழுவின் ஓர் உறுப்பினரின் நன்மதிப்புக்குக் களங்கத்தை ஏற்படுத்தும் வகையில் வாய்மொழியாக அல்லது எழுத்துருவில் அச்சுறுத்தல்
(4) கல்வி நிறுவகத்தின் வளவில் பலாத்காரமாக வதிதல்
(5) கல்வி நிறுவகத்தில் கல்விசார்ந்த சுவரொட்டிகளைக் காட்சிப்படுத்தல்

**16.** 2016.01.01 ஆந் திகதி ஒரு வெள்ளிக்கிழமையாகும். 2018.01.01 ஆந் திகதி ஒரு

(1) ஞாயிற்றுக்கிழமை (2) திங்கட்கிழமை (3) செவ்வாய்க்கிழமை
(4) புதன்கிழமை (5) வியாழக்கிழமை

**17.** இரண்டு ரூபா நாணயங்கள் 4 இனதும் ஒரு ரூபா நாணயங்கள் 2 இனதும் நிறை இரண்டு ரூபா நாணயங்கள் 2 இனதும் ஒரு ரூபா நாணயங்கள் 6 இனதும் நிறைக்குச் சமமெனின், ஒரு ரூபா நாணயத்தின் நிறை

(1) இரண்டு ரூபா நாணயத்தின் நிறையின் $\frac{1}{4}$ ஆகும். (2) இரண்டு ரூபா நாணயத்தின் நிறையின் $\frac{1}{3}$ ஆகும்.
(3) இரண்டு ரூபா நாணயத்தின் நிறையின் $\frac{2}{3}$ ஆகும். (4) இரண்டு ரூபா நாணயத்தின் நிறையின் $\frac{1}{2}$ ஆகும்.
(5) இரண்டு ரூபா நாணயத்தின் நிறையின் $\frac{3}{4}$ ஆகும்.

**18.** மருத்துவர் ஒருவர் ஒரு நோயாளிக்கு ஏழு நாட்களுக்கு இரு வகை மருந்துகளை விதித்தார். முதல் வகை ஆறு மணித்தியாலத்திற்கு ஒரு தடவையும் இரண்டாம் வகை எட்டு மணித்தியாலத்திற்கு ஒரு தடவையும் எடுக்கப்படுதல் வேண்டும். நோயாளி முதல் நாளில் இரு மருந்துகளையும் மு.ப. 6 மணிக்கு எடுத்தால், பின்னர் எப்போது இரு மருந்துகளையும் ஒரே நேரத்தில் எடுப்பார் ?

(1) அதே நாளில் நண்பகல் 12 (2) அதே நாளில் பி.ப. 4 (3) அதே நாளில் பி.ப. 8
(4) அதே நாளில் பி.ப. 10 (5) அடுத்த நாளில் மு.ப. 6

**19.** புகையிரத அட்டவணைக்கேற்ப புகையிரத நிலையம் A இலிருந்து சரியாக ஒரு குறித்த நேரத்திற்குப் புறப்படும் புகையிரதம் எதுவும் 40 km $h^{-1}$ என்னும் ஒரு சராசரிக் கதியைப் பேணினால் புகையிரத நிலையம் B ஐச் சரியாக குறித்த நேரத்தில் அடையலாம். கிசாணி சென்ற புகையிரதம் நிலையம் A இலிருந்து 15 நிமிடங்கள் தாமதமாகப் புறப்பட்டபோதிலும் 45 km $h^{-1}$ என்னும் ஒரு சராசரிக் கதியைப் பேணிக் கொண்டு சரியாகக் குறித்த நேரத்திற்குப் புகையிரத நிலையம் B ஐ அடைந்தது. நிலையம் A இற்கும் நிலையம் B இற்குமிடையே உள்ள தூரம் யாது ?

(1) 90 km (2) 60 km (3) 56 km (4) 48 km (5) 45 km

[பக். 3 ஐப் பார்க்க

**20.** ஒரு குழுவில் உள்ள ஆண்பிள்ளைகளின் எண்ணிக்கை, பெண்பிள்ளைகளின் எண்ணிக்கை ஆகியன **தொடர்பாகக்** குழுக்கள் சர்வசமனாக இருக்குமாறு 128 பெண்பிள்ளைகளையும் 96 ஆண்பிள்ளைகளையும் குழுக்களாகப் பிரித்தல் வேண்டுமெனின், உயர்ந்தபட்சம் எத்தனை குழுக்களை அமைக்கலாம் ?
(1) 2 (2) 4 (3) 24 (4) 32 (5) 48

● **21, 22, 23** ஆகிய வினாக்கள் பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.
800 சீமெந்துத் துண்டக் கற்களைக் கொண்டு ஒரு சுவரை அமைத்து அதன் இரு பக்கங்களிலும் சாந்திடுவதற்கு இரு மேசன்மார் அமர்த்தப்பட்டுள்ளனர். முதல் மேசன் துண்டக் கற்களை மணித்தியாலத்திற்கு 100 துண்டக் கற்கள் வீதம் அடுக்கி மணித்தியாலத்திற்கு 50 துண்டக் கற்கள் வீதம் இரு பக்கங்களிலும் சாந்திடுகின்றார். இரண்டாம் மேசன் துண்டக் கற்களை மணித்தியாலத்திற்கு 60 துண்டக் கற்கள் வீதம் அடுக்கி மணித்தியாலத்திற்கு 75 துண்டக் கற்கள் வீதம் இரு பக்கங்களிலும் சாந்திடுகின்றார். இரு மேசன்மாரும் முதலில் துண்டக் கற்களை அடுக்குவதன் மூலம் வேலையைத் தொடங்கினர். அவர்கள் இருவரும் 400 துண்டக் கற்களை அடுக்கிய பின்னர் இரண்டாம் மேசன் சுவரில் சாந்திடத் தொடங்கிய அதே வேளை முதல் மேசன் எஞ்சியுள்ள துண்டக் கற்களைத் தொடர்ந்து அடுக்கினார். முதல் மேசன் எல்லாத் துண்டக் கற்களையும் அடுக்கியதும் அவர் இரண்டாம் மேசனுடன் சேர்ந்து சுவரில் சாந்திடும் பணி முடிவடையும் வரைக்கும் தொடர்ந்து சாந்திட்டார்.

**21.** முதல் மேசன் சீமெந்துத் துண்டக் கற்களை அடுக்குவதிற் செலவிட்ட நேரம் யாது ?
(1) 8 மணித்தியாலம் (2) 7 மணித்தியாலம் 30 நிமிடம் (3) 6 மணித்தியாலம் 30 நிமிடம்
(4) 6 மணித்தியாலம் (5) 5 மணித்தியாலம் 30 நிமிடம்

**22.** இரு மேசன்மாரும் ஒரே நேரத்தில் சுவரில் எவ்வளவு நேரம் சாந்திட்டனர் ?
(1) 2 மணித்தியாலம் (2) 2 மணித்தியாலம் 30 நிமிடம் (3) 3 மணித்தியாலம் 30 நிமிடம்
(4) 4 மணித்தியாலம் (5) 6 மணித்தியாலம்

**23.** அவர்கள் வேலையைச் செய்து முடிப்பதற்கு எவ்வளவு நேரம் எடுத்தது ?
(1) 8 மணித்தியாலம் (2) 8 மணித்தியாலம் 30 நிமிடம் (3) 9 மணித்தியாலம் 30 நிமிடம்
(4) 10 மணித்தியாலம் (5) 10 மணித்தியாலம் 30 நிமிடம்


**24.** ஒவ்வொன்றும் ஒரு மாறா வீதத்தில் நீரைப் பம்பும் இரு பம்பிகள் சேர்ந்து ஒரு வெறும் நீச்சல் தடாகத்தை முற்றாக நிரப்புவதற்கு 3 மணித்தியாலத்தை எடுக்கின்றன. முதற் பம்பி தனியே அதனை முற்றாக நிரப்புவதற்கு 5 மணித்தியாலத்தை எடுக்கின்றது. இரண்டாம் பம்பி தனியே அதனை முற்றாக நிரப்புவதற்கு எவ்வளவு நேரத்தை எடுக்கும் ?
(1) 6 மணித்தியாலம் (2) $6\frac{1}{2}$ மணித்தியாலம் (3) 7 மணித்தியாலம்
(4) $7\frac{1}{2}$ மணித்தியாலம் (5) 8 மணித்தியாலம்

**25.** ரமேஸ் ஒரு கிறிக்கெற்று மைதானத்தின் பந்து வீச்சாளர் முனையில் உள்ள விக்கெற்றுகளிலிருந்து தொடங்கி கிழக்கு நோக்கி 5 m உம் பின்னர் வடக்கு நோக்கி 9 m உம் இறுதியாக கிழக்கு நோக்கி 7 m உம் நடந்து சென்று மைதானத்தில் ஓர் இடத்தில் நிற்கின்றார். ரமேஸிற்கும் பந்து வீச்சாளரின் முனையில் உள்ள விக்கெற்றுகளுக்குமிடையே உள்ள தூரம் யாது?
(1) 21 m (2) 19 m (3) 16 m (4) 15 m (5) 12 m

**26.** பிள்ளைகளின் குழு ஒன்றில் 10 பெண் பிள்ளைகளும் 15 ஆண் பிள்ளைகளும் உள்ளனர். பெண் பிள்ளைகளின் சராசரி வயது 8 ஆண்டுகளும் 4 மாதங்களும் ஆகும். அதே வேளை ஆண் பிள்ளைகளின் சராசரி வயது 8 ஆண்டுகளும் 9 மாதங்களும் ஆகும். இக்குழுவின் சராசரி வயது யாது ?
(1) 8 ஆண்டுகளும் $8\frac{1}{2}$ மாதங்களும் (2) 8 ஆண்டுகளும் 7 மாதங்களும்
(3) 8 ஆண்டுகளும் $6\frac{1}{2}$ மாதங்களும் (4) 8 ஆண்டுகளும் 6 மாதங்களும்
(5) 8 ஆண்டுகளும் 5 மாதங்களும்


**27.** ஒரு வட்டப் பாதையின் ஒரே புள்ளியிலிருந்து ஒரே நேரத்தில் புறப்பட்டு பாதை வழியே வலஞ்சுழியாகச் சீரான கதிகளில் ராஜ் நடந்தும் சேரன் ஓடியும் சென்றனர். ராஜ் தனது முதற் சுற்றை முடித்தபோது சேரன் அவரை இரு தடவைகள் கடந்துள்ளார். சேரன் ஓடிய கதி
(1) ராஜ் நடந்த கதியின் இரு மடங்கிலும் கூடியதும் மூன்று மடங்கிலும் குறைந்ததும் ஆகும்.
(2) ராஜ் நடந்த கதியின் செப்பமாக மூன்று மடங்காகும்.
(3) ராஜ் நடந்த கதியின் செப்பமாக இரு மடங்காகும்.
(4) ராஜ் நடந்த கதியின் மூன்று மடங்கிலும் கூடியதாகும்.
(5) ராஜ் நடந்த கதியின் இரு மடங்கிலும் குறைவாகும்.

**28.** உருவில் தரப்பட்டுள்ள வடிவத்தை அமைப்பதற்கு $1\ m^3$ அளவுள்ள ஆறு சதுரமுகிகள் தரையில் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. வெளியே தெரியும் எல்லாப் பரப்புகளிலும் தீந்தை பூசியிருந்தால், தீந்தை பூசப்பட்ட வடிவத்தின் மேற்பரப்பின் பரப்பளவு யாது ?



(1) $21\ m^2$ (2) $18\frac{1}{2}\ m^2$ (3) $20\ m^2$ (4) $19\ m^2$ (5) $17\ m^2$

**29.** தரப்பட்டுள்ள தொடரில் தவறியுள்ள உரு எது ?






(1) (2) (3) (4) (5)


More Past Papers at
tamilguru.lk

[பக். 4 ஐப் பார்க்க

**30.** தரப்பட்டுள்ள மாதிரியுருவைப் பயன்படுத்திப் பின்வரும் எச்சதுரமுகியைச் செய்ய**முடியாது** ?



(1) (2) (3) (4) (5)



**31.** ஒரு பழப் பானத்தைத் தயாரிப்பதற்குச் செறிந்த தோடம்பழச் சாறு, செறிந்த அன்னாசிப்பழச் சாறு, நீர் ஆகியன 1 : 2 : 3 என்னும் கனவளவு விகிதத்தில் ஒருமிக்கக் கலக்கப்படுகின்றன. இப்பழப்பானத்தின் 1200 லீற்றரைத் தயாரிப்பதற்கு எத்தனை லீற்றர் செறிந்த அன்னாசிப்பழச் சாறு தேவைப்படும் ?
(1) 600 (2) 500 (3) 400 (4) 300 (5) 200

● **32, 33** ஆகிய வினாக்கள் பின்வரும் தகவல்களை அடிப்படையாய்க் கொண்டவை.
ஒரு குறித்த ஒரு நாளில் ஒரு மருத்துவமனையின் வெளி நோயாளர் பிரிவிற்கு வந்த 140 நோயாளிகளில் 66 நோயாளிகள் நீரிழிவு நோயினாலும் 79 நோயாளிகள் உயர் இரத்த அமுத்த நோயினாலும் 48 நோயாளிகள் ஏனைய நோய்களினாலும் பாதிக்கப்பட்டிருந்தனர்.

**32.** பின்வரும் கூற்றுகளில் எது கட்டாயம் உண்மையாக இருத்தல் வேண்டும் ?
(1) நீரிழிவு நோய் அல்லது உயர் இரத்த அமுத்தம் உள்ள குறைந்தபட்சம் ஒரு நோயாளியேனும் வேறொரு நோயினாற் பாதிக்கப்பட்டுள்ளார்.
(2) நீரிழிவு நோய் உள்ள சில நோயாளிகள் உயர் இரத்த அமுத்தத்தைக் கொண்டிருப்பதில்லை.
(3) குறைந்தபட்சம் 27 நோயாளிகளேனும் நீரிழிவு நோய், உயர் இரத்த அமுத்தம், வேறொரு நோய் ஆகியவற்றைக் கொண்டுள்ளனர்.
(4) நீரிழிவு நோயாளர்களில் அரைவாசிக்கு மேற்பட்டோர் உயர் இரத்த அமுத்தத்தைக் கொண்டுள்ளனர்.
(5) நோயாளி எவருக்கும் ஆஸ்துமா நோய் இல்லை.

**33.** 42 நோயாளிகள் நீரிழிவு நோயை மாத்திரமும் 13 நோயாளிகள் உயர் இரத்த அமுத்தம், நீரிழிவு ஆகிய இரண்டையும் கொண்டிருப்பின், எத்தனை நோயாளிகள் உயர் இரத்த அமுத்தமின்றி நீரிழிவையும் வேறொரு நோயையும் கொண்டுள்ளனர் ?
(1) 11 (2) 12 (3) 13 (4) 14 (5) 15


● **34, 35** ஆகிய வினாக்கள் பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.
2013 தொடக்கம் 2015 வரையுள்ள காலத்தின்போது இலங்கையில் ஒவ்வொரு பிரதான விவசாயப் பயிரினதும் அண்ணளவான மொத்த உற்பத்தி பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| ஆண்டு | தேயிலை (மில்லியன் kg) | இறப்பர் (மில்லியன் kg) | தேங்காய் (மில்லியன் தேங்காய்கள்) |
|---|---|---|---|
| 2013 | 340 | 130 | 2513 |
| 2014 | 338 | 99 | 2870 |
| 2015 | 329 | 89 | 3056 |

**34.** 2014 தொடக்கம் 2015 வரை தேங்காய் உற்பத்தியில் உள்ள அண்ணளவான சதவீத அதிகரிப்பு யாது ?
(1) 2% (2) 4% (3) 6% (4) 8% (5) 10%

**35.** தரப்பட்ட காலத்திற்கு ஆண்டுக்கான மொத்தத் தேயிலை உற்பத்தியின் சராசரிப் பெறுமானம் மில்லியன் kg இல் யாது ?
(1) 329 (2) 336 (3) 337 (4) 338 (5) 340

● **36, 37** ஆகிய வினாக்களுக்குப் பின்வரும் வரைபைக் கருதுக. அவ்வரைபு ஒரே உற்பத்திப் பொருளின் சர்வசம அலகுகளை உற்பத்தி செய்யும் இரு இயந்திரங்களின் தொழிற்படும் நேரங்களைக் காட்டுகின்றது.




**36.** மு.ப. 8.00 தொடக்கம் பி.ப. 1.00 வரைக்கும் முதல் இயந்திரத்தின் தொழிற்படும் நேரத்திற்கும் இரண்டாம் இயந்திரத்தின் தொழிற்படும் நேரத்திற்குமிடையே உள்ள விகிதம் யாது ?
(1) 5 : 6 (2) 5 : 7 (3) 6 : 5 (4) 7 : 5 (5) 8 : 7

**37.** மு.ப. 8.00 தொடக்கம் பி.ப. 1.00 வரை முதல் இயந்திரத்தினாலும் இரண்டாம் இயந்திரத்தினாலும் உற்பத்தி செய்யப்பட்ட அலகுகளின் எண்ணிக்கைகள் முறையே $U_1$ இனாலும் $U_2$ இனாலும் வகைகுறிக்கப்படுகின்றன. பின்வருவனவற்றில் எது இரண்டாம் இயந்திரத்திலும் பார்க்க முதல் இயந்திரம் திறமையானது என்பதை உறுதிப்படுத்தும் ?
(1) $U_1 : U_2 = 1000 : 750$ (2) $U_1 : U_2 = 1200 : 1000$ (3) $U_1 : U_2 = 1300 : 1000$
(4) $U_1 : U_2 = 1500 : 1000$ (5) $U_1 : U_2 = 2000 : 1500$

**38.** அதிசய நாட்டில் நுளம்புக் குடித்தொகை ஒவ்வொரு மாதமும் $\frac{1}{3}$ இனாற் குறைகின்றது. 2015 ஒக்ரோபர் 01 ஆந் திகதி நுளம்புக் குடித்தொகை 300 எனக் காணப்படுமெனின், 2015 யூலை 01 ஆந் திகதி நுளம்புக் குடித்தொகை யாது ?
(1) 100 (2) 900 (3) 2 700 (4) 8 100 (5) 24 300

[பக். 5 ஐப் பார்க்க

**39.** பின்வரும் கூட்டற் கணக்கில் இலக்கம் $d$ யாது ?

$$\begin{array}{r} a\ b\ c \\ +\ a\ b\ c\ d \\ \hline 2\ 0\ 1\ 6 \end{array}$$

(1) 1 (2) 2 (3) 3 (4) 4 (5) 5

● **40, 41** ஆகிய வினாக்கள் பின்வரும் பந்தியை அடிப்படையாகக் கொண்டவை.

அனில், நீலா, குமார், உமய்ர், ஷனன் ஆகியோர் இன ஒற்றுமைக்கான சங்கத்தின் குழு உறுப்பினர்களாவர். இக்குழுவில் தலைவர், செயலாளர், பொருளாளர், அமைப்பாளர், ஊடகப் பேச்சாளர் ஆகியோர் உள்ளனர். கடந்த ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் ஊடகப் பேச்சாளராகிய குமார் அதிக அளவில் உரையாற்றிய அதே வேளை பொருளாளர் குறைந்த அளவில் உரையாற்றியுள்ளார். அனில் என்பவர் அமைப்பாளரிலும் பார்க்கக் கூடுதலாகவும் தலைவரிலும் பார்க்கக் குறைவாகவும் உரையாற்றினார்.

**40.** குழுவின் செயலாளர்
(1) ஷனன் (2) அனில் (3) நீலா (4) குமார் (5) உமய்ர்

**41.** மேலும் நீலா, உமய்ர் ஆகிய இருவரும் ஷனனிலும் பார்க்கக் குறைவாக உரையாற்றின் குழுவின் தலைவர்
(1) ஷனன் (2) அனில் (3) நீலா (4) குமார் (5) உமய்ர்

● **42, 43** ஆகிய வினாக்கள் பின்வரும் விவரணத்தை அடிப்படையாய் கொண்டவை.

ஒரு சினிமாக் கம்பனி கீழே தரப்பட்டுள்ள மூன்று திரைப்படங்களைத் தயாரிப்பதற்கு உத்தேசித்துள்ளது.

* வெந்நீர்த் தடாகம்
* நன்னீர்த் தடாகம்
* உப்புநீர்த் தடாகம்

இக்கம்பனி ஒரு நடிகர், ஒரு நடிகை, ஓர் இசைக்கலைஞர், ஒரு ஒளிப்படக்கலைஞர், ஒரு பதிப்பாசிரியர் ஆகியோர் இடம்பெறும் தனது சொந்தக் குழுவைக் கொண்டுள்ளது. கம்பனி கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவர்களுடைய கோரிக்கைகளையும் நிபந்தனைகளையும் கருதிய பின்னர் கம்பனி அவர்களை அத்திரைப்படங்களுக்காக அமர்த்தி ஏனைய கலைஞர்களை வெளியேயிருந்து அமர்த்திக் கொள்ளும்.

(a) நடிகை ஒரு திரைப்படத்தில் மாத்திரம் நடிப்பார்.
(b) வெந்நீர்த் தடாகத்தில் நடிகர் நடித்தால், நடிகை அதில் நடிக்க மாட்டார்.
(c) இசைக்கலைஞர் உப்புநீர்த் தடாகத்திற்கு இசையமைப்பார்.
(d) நடிகர் அல்லது ஒளிப்படக்கலைஞர் உப்புநீர்த் தடாகத்திற்குப் பணியாற்றுவர்.
(e) ஒளிப்படக்கலைஞரும் இசைக்கலைஞரும் ஒரே திரைப்படத்தில் பணியாற்றுவதற்கு மறுப்பர்.

**42.** பின்வருவனவற்றில் எது ஓர் இயல்தகு பணிப் பொறுப்பாகும் ?

| | **வெந்நீர்த் தடாகம்** | **நன்னீர்த் தடாகம்** | **உப்புநீர்த் தடாகம்** |
|---|---|---|---|
| (1) | நடிகர், நடிகை, பதிப்பாசிரியர் | நடிகர், இசைக்கலைஞர், பதிப்பாசிரியர் | இசைக்கலைஞர், ஒளிப்படக்கலைஞர், பதிப்பாசிரியர் |
| (2) | நடிகை, ஒளிப்படக்கலைஞர், பதிப்பாசிரியர் | நடிகர், ஒளிப்படக்கலைஞர், பதிப்பாசிரியர் | நடிகை, இசைக்கலைஞர், பதிப்பாசிரியர் |
| (3) | நடிகர், ஒளிப்படக்கலைஞர், பதிப்பாசிரியர் | நடிகை, ஒளிப்படக்கலைஞர், பதிப்பாசிரியர் | நடிகர், இசைக்கலைஞர், பதிப்பாசிரியர் |
| (4) | நடிகர், ஒளிப்படக்கலைஞர், பதிப்பாசிரியர் | நடிகர், இசைக்கலைஞர், பதிப்பாசிரியர் | நடிகர், நடிகை, பதிப்பாசிரியர் |
| (5) | நடிகர், ஒளிப்படக்கலைஞர், பதிப்பாசிரியர் | இசைக்கலைஞர், ஒளிப்படக்கலைஞர், பதிப்பாசிரியர் | நடிகை, இசைக்கலைஞர், ஒளிப்படக்கலைஞர் |

**43.** பின்வரும் பணிப் பொறுப்பைக் கருதுக.

| **வெந்நீர்த் தடாகம்** | **நன்னீர்த் தடாகம்** | **உப்புநீர்த் தடாகம்** |
|---|---|---|
| நடிகை | பதிப்பாசிரியர் | நடிகர் |
| a | c | இசைக்கலைஞர் |
| b | d | e |

பின்வருவனவற்றில் எது கட்டாயம் உண்மையானது ?
(1) a = ஒளிப்படக்கலைஞர் (2) b = இசைக்கலைஞர் (3) c = நடிகர்
(4) d = நடிகை (5) e = பதிப்பாசிரியர்

[பக். 6 ஐப் பார்க்க

**44.** பின்வரும் அவதானிப்பு–முடிவுச் சோடிகளில் எது எப்போதும் **உண்மையானதன்று** ?

| | அவதானிப்பு | முடிவு |
|---|---|---|
| (1) | ஒரு சதுரமுகியின் கனவளவு 8 $cm^3$ ஆகும். | அதன் பக்கத்தின் நீளம் 2 cm ஆகும். |
| (2) | ஒரு வட்டத்தின் பரிதி 8 $\pi$ cm ஆகும். | அதன் ஆரை 4 cm ஆகும். |
| (3) | ஒரு தளத்தில் வரையப்படும் மூன்று நேர்கோடுகள் இரு புள்ளிகளில் மாத்திரம் இடைவெட்டுகின்றன. | அவற்றில் இரண்டு ஒன்றுக்கொன்று சமாந்தரம். |
| (4) | ஒரு செங்கோண முக்கோணியின் இரு பக்கங்களின் நீளங்கள் 4 cm உம் 5 cm உம் ஆகும். | மற்றைய பக்கத்தின் நீளம் 3 cm ஆகும். |
| (5) | ஒரு சதுரத்தின் சென்ரிமீற்றரில் அளக்கப்படும் சுற்றளவு சதுர சென்ரிமீற்றரில் அளக்கப்படும் அதன் பரப்பளவின் இரு மடங்கிற்குச் சமம். | அதன் பக்கத்தின் நீளம் 2 cm ஆகும். |

**45.** இலங்கையில் அனுபவிக்கப்படும் வழக்கம்போல் அல்லாத உயர் வெப்பநிலைகள் பற்றிக் கருத்துத் தெரிவிக்கும்போது ஒரு செய்தித்தாள் இந்நிலைமைக்கு ஒழுங்கற்ற மழைவீழ்ச்சிக் கோலங்களே முக்கிய காரணம் என்னும் முடிவுக்கு வந்தது. பின்வரும் கூற்றுகளில் எது உண்மையாக இருப்பின் இச்செய்தித்தாளின் முடிவை மிகவும் நலிவடையச் செய்யும் ?

(1) அதேபோன்ற வெப்பநிலை அதிகரிப்பு ஏற்பட்ட இந்தியாவின் கேரளத்தில் மழைவீழ்ச்சிக் கோலங்கள் மிகவும் ஒழுங்காக இருந்தன.
(2) கடந்த இருபது ஆண்டுகளின்போது மாத்திரம் இலங்கையின் மழைவீழ்ச்சிக் கோலங்கள் பற்றி ஆராயப்பட்டுள்ளது.
(3) மோட்டர் வாகனங்களிலிருந்தான மிகையான காலல்களினால் இலங்கையின் மழைவீழ்ச்சி வட்டம் அடிக்கடி குழப்பப்படுகின்றது.
(4) ஒழுங்கற்ற மழைவீழ்ச்சிக் கோலங்கள் காலநிலையிலும் பார்க்க விவசாயத்தில் மோசமான தாக்கத்தைக் கொண்டுள்ளன.
(5) வெப்பநிலை அதிகரிப்புக்கு மழைவீழ்ச்சிக் கோலங்களின் ஒழுங்கீனம் மாத்திரம் காரணமன்று.

● **46, 47** ஆகிய வினாக்களுக்காகப் பின்வரும் பந்தியை வாசிக்க.

2016 மே மாதத்தில் இலங்கையில் வரட்சியுடன் வானிலை அனர்த்தங்களைத் தொடர்ந்து புயலுடன் கூடிய மழை காரணமாக மண்சரிவுகளும் வெள்ளங்களும் ஏற்பட்டு, பல மக்கள் இறந்ததோடு ஆயிரக்கணக்கானோர் வீடுவாசல்களை இழந்தனர். வெள்ளங்கள், கடும் காற்றுகள், மின்னல் ஆகியவற்றின் விளைவாக ஏற்பட்ட அழிவு காரணமாகப் பல நகர வீதிகளும் நகர்ப்புறங்களும் வாகனங்கள் செல்ல முடியாதனவாக இருந்தன.
1956 இல் இலங்கையின் மொத்த நிலப்பரப்பளவாகிய 16 மில்லியன் ஏக்கரில் ஏறத்தாழ 7 மில்லியன் ஏக்கரில் இலங்கையின் காடுகள் இருந்தன. கடந்த 60 ஆண்டுகளின்போது காட்டு மூடுகை 44% இலிருந்து 17% இற்குக் குறைக்கப்பட்டு, இன்று அது ஏறத்தாழ 3 மில்லியன் ஏக்கராக உள்ளது.

மண் அகழ்வு, கண்டல்களின் அழிப்பு, நீர் மறித்துவைப்புப் பிரதேசங்களை நிரப்புதல், ஏற்கெனவே உள்ள வடிகாலமைப்புத் தொகுதிகளைத் தடுக்கும் சட்டத்திற்கு முரணான கட்டட அமைப்புகள் ஆகியவற்றின் விளைவாக இயற்கை அனர்த்தங்கள் அதிகரித்துள்ளன.

**46.** மேற்குறித்த பந்திகளுக்கேற்பக் காலநிலை அனர்த்தங்கள் ஏற்படுவதற்குக் காரணம்

(1) வானிலைத் தெய்வம் இலங்கை மக்களுடன் கோபமாக இருக்கின்றமை.
(2) புயல் இலங்கையினூடாகக் கிழக்கு இந்தியாவைக் கடந்து பங்களாதேஷை அடைந்தமை.
(3) குப்பை கூளங்கள் கடலிற்குச் செல்லும் வெள்ள நீரைத் தடுக்கின்றமை.
(4) காட்டு மூடுகை குறைதல், கண்டல்கள் அழிக்கப்படுதல், ஏற்கெனவே உள்ள வடிகாலமைப்புத் தொகுதிகள் தடுக்கப்படுதல் ஆகியன.
(5) மலைப் பிரதேசங்களில் மலைப் பாறைகளிலிருந்து மிகையாக உள்ள மண் கடும் மழையின்போது கீழே பாய்ந்து செல்லல்.

**47.** இப்பந்தியில் வெளியார்ந்த விதத்தில் **குறிப்பிடப்படாதது**

(1) சட்டரீதியற்ற கட்டட அமைப்பு
(2) கடலுக்குச் செல்லுமாறு அமைக்கப்படும் இரு நிலக்கீழ் வடிகாலமைப்புத் தொகுதிகள்
(3) நீர் மறித்துவைப்புப் பிரதேசங்களை நிரப்புதல்
(4) காட்டு மூடுகையை 20% இலும் குறைவாகக் குறைத்தல்
(5) 2016 மே மாதத்தில் மிகவும் உயர்ந்த வெப்ப வரட்சி, கடும் மழை, வெள்ளம், மண் சரிவுகள் ஆகியன ஏற்படுதல்

**48.** ஓர் உளவுப் பிரிவின் உறுப்பினர் ஒருவருக்கு 'FTDBQFE' என்னும் குறிமுறைச் செய்தி கிடைத்துள்ளது. அது 'ESCAPED' எனக் குறியவிழ்க்கப்பட்டது. பின்வரும் சொற்களில் எது 'GPVOE' என்னும் பதிற் செய்தியின் மொழிபெயர்ப்பாகும் ?

(1) FOUND (2) ERASE (3) GUIDE (4) FIGHT (5) GROUP

● **49, 50, 51** என்னும் வினாக்களில் ஒரு முடிபும் I, II, III என இலக்கமிடப்பட்ட மூன்று தகவல் தொகுதிகளும் தரப்பட்டுள்ளன.

❋ அம்மூன்று தகவல் தொகுதிகளில் ஒன்றை மாத்திரம் பயன்படுத்தி முடிபைச் செய்யலாமெனின், *A* ஐத் தெரிந்தெடுக்க.
❋ I, II ஆகியவற்றை ஒருமிக்கப் பயன்படுத்தி முடிபைச் செய்யலாமெனின், *B* ஐத் தெரிந்தெடுக்க.
❋ I, III ஆகியவற்றை ஒருமிக்கப் பயன்படுத்தி முடிபைச் செய்யலாமெனின், *C* ஐத் தெரிந்தெடுக்க.
❋ II, III ஆகியவற்றை ஒருமிக்கப் பயன்படுத்தி முடிபைச் செய்யலாமெனின், *D* ஐத் தெரிந்தெடுக்க.
❋ I, II, III ஆகியவற்றை ஒருமிக்கப் பயன்படுத்தி முடிபைச் செய்யலாமெனின், *E* ஐத் தெரிந்தெடுக்க.

[பக். 7 ஐப் பார்க்க

**49.** முடிபு : 2016 மே மாதத்தின் நடுப்பகுதியில் பெய்த கடும் மழை காரணமாக ஐந்து மாவட்டங்கள் மண்சரிவுகளினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டன.

I. 2016 மே மாதத்தின் நடுப் பகுதியில் இலங்கையின் சில பகுதிகளில் 24 மணித்தியாலங்களுக்கு 350 mm வரையான மழைவீழ்ச்சி இருந்தது.

II. 2016 மே மாதத்தில் வெள்ளத்தையும் மண்சரிவையும் ஏற்படுத்திய புயலுடன் கூடிய கடும் மழையினால் கேகாலை, இரத்தினபுரி, களுத்துறை, பதுளை, கண்டி ஆகிய மாவட்டங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன.

III. 2016 ஏப்பிரில் / மே மாதங்களில் நாட்டில் நிலவிய கடுமையான வெப்ப நிலைமை 2016 மே மாத நடுப் பகுதியில் பெய்த மழையின் விளைவாகத் தணிந்தது.

(1) *A* (2) *B* (3) *C* (4) *D* (5) *E*

**50.** முடிபு : தனியார் பேருந்துப் போக்குவரத்துச் சேவை அரச பேருந்துப் போக்குவரத்துச் சேவையைக் குறை நிரப்புகின்றது.

I. தனியார் பேருந்துச் சேவை இலாபமற்ற பேருந்துப் பாதைகளை உள்ளடக்கவில்லை.

II. அரச பேருந்துப் போக்குவரத்துச் சேவையில் கிடைக்கத்தக்க பேருந்துகளின் எண்ணிக்கை பயணிகளின் தேவையைப் பூர்த்திசெய்வதற்குப் போதியதன்று.

III. அரசாங்கம் பேருந்துக் கட்டணங்கள், பேருந்து ஓட்ட நேரசூசிகள் என்பன தொடர்பாகத் தனியார் பேருந்து உரிமையாளர்களுடன் அவ்வப்போது உடன்பாடுகளுக்கு வருகின்றது.

(1) *A* (2) *B* (3) *C* (4) *D* (5) *E*

**51.** முடிபு : 2015 ஓகஸ்ற் க.பொ.த. (உ.த.) ப் பரீட்சையில் தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானத்திற்குத் (ST) தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை உயிர்முறைமைகள் தொழினுட்பவியலுக்குத் (BT) தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கையிலும் பார்க்கக் கூடியதாகும்.


I. பொறியியல் தொழினுட்பவியலுக்குத் (ET) தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியலுக்குத் (ICT) தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கையிலும் பார்க்கக் குறைந்ததாகும்.

II. BT இற்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை ET இற்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கையிலும் பார்க்கக் குறைந்ததாகும்.

III. ST இற்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை ET இற்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கையிலும் பார்க்கக் கூடியதாகும்.

(1) *A* (2) *B* (3) *C* (4) *D* (5) *E*

● **52, 53** ஆகிய வினாக்கள் தொடர்பாகக் கீழே தரப்பட்டுள்ள குறியீடுகளைப் பரிசீலிக்க.




*A* *B* *C* *D* *E* *F*

**52.** பின்வரும் சோடிகளில் எது சேமிப்புக் கணக்கு வசதிகளைத் தருகின்றது ?

(1) *A, E* (2) *B, C* (3) *C, D* (4) *D, E* (5) *E, F*

**53.** (a) தொடக்கம் (d) வரைக்கும் தொடர் ஒழுங்கில் உள்ள பின்வருவனவற்றுக்கு ஒத்த குறியீடுகளை வகைகுறிக்கும் ஆங்கில எழுத்துகளை ஒழுங்குபடுத்துக.

(a) வதிவிட ஆதனம் (b) நடைபாதைப் பலகை

(c) தேசிய சேமிப்பு வங்கி (d) வாகன விற்பனை


(1) *BEDC* (2) *BDFC* (3) *BDAC* (4) *BEFC* (5) *BDEC*

**54.** எண்ணக்கருரீதியில் வேறுபட்ட தொடரைத் தெரிந்தெடுக்க.

(1) முட்டை ⟶ குடம்பி ⟶ கூட்டுப்புழு ⟶ அந்து
(2) வித்து ⟶ மரம் ⟶ வித்து ⟶ மரம்
(3) சில்லு ⟶ வண்டி ⟶ நீராவி வண்டி ⟶ தானியங்கி வண்டி
(4) வேடுவன் ⟶ இடையன் ⟶ விவசாயி ⟶ கைவினைஞர்
(5) பெருவெடிப்பு ⟶ உபவணுத் துணிக்கைகள் ⟶ அணுக்கள் ⟶ வெள்ளுடுத்தொகுதிகள்

More Past Papers at
tamilguru.lk

**55.** ஒரு குறித்த சம்பவத்துடன் தொடர்புபட்ட ஆறு படங்கள் தரப்பட்டுள்ளன. படங்களைச் சரியான ஒழுங்கில் கொண்டுள்ள விடையைத் தெரிந்தெடுக்க.



*A* *B* *C* *D* *E* *F*

(1) *CBAFDE* (2) *EBAFDC* (3) *ECBAFD* (4) *CBEFAD* (5) *EBACFD*

[பக். 8 ஐப் பார்க்க

**56.** ஒரு வகுப்பறையில் ஒரு வகுப்பு ஆசிரியருக்கும் மாணவர்களுக்குமிடையே நடைபெற்ற ஒரு கலந்துரையாடல் கீழே சரியான ஒழுங்கிலின்றித் தரப்பட்டுள்ளது. மிகவும் தருக்கரீதியில் அமைந்த தொடரை வகைகுறிக்கும் விடையைத் தெரிந்தெடுக்க.

*A* - வணக்கம் டீச்சர்!
*B* - தமரா, பாராளுமன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை யாது?
*C* - டீச்சர், 225 உறுப்பினர்கள் உள்ளனர்.
*D* - வணக்கம் பிள்ளைகளே. நாம் கடைசி வகுப்பில் படித்த தலைப்பு யாது?
*E* - டீச்சர், நாம் இலங்கையில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் பற்றிப் படித்தோம்.
*F* - பத்மா, எந்தத் தேர்தல் மாவட்டத்தில் உயர்ந்தபட்ச எண்ணிக்கையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்? எத்தனை பேர்?
*G* - டீச்சர், கொழும்பு மாவட்டம். 19 உறுப்பினர்கள்
*H* - அருணி, 225 இல் எத்தனை உறுப்பினர்கள் வாக்குகளின் மூலம் நேரடியாகத் தெரிந்தெடுக்கப்படுகின்றனர்?
*I* - டீச்சர், 196 உறுப்பினர்கள் நேரடியாகத் தெரிந்தெடுக்கப்படுகின்றனர்.
*J* - தரிஷி, எத்தேர்தல் மாவட்டத்தில் குறைந்தபட்ச எண்ணிக்கையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்? எத்தனை பேர்?
*K* - டீச்சர், திருகோணமலை மாவட்டம். 4 உறுப்பினர்கள்.

(1) *ADEHIBCFGJK* (2) *ADEFGHIBCJK* (3) *ADEJKFGHIBC*
(4) *ADEBCFKJGHI* (5) *ADEBCHIFGJK*

● **57, 58** ஆகிய வினாக்களுக்குக் கீழே தரப்பட்டுள்ள கூற்றுகளை வாசிக்க.

*A* - கமல் தொடக்கத் துடுப்பாட்டக்காரர் ஆவார்.
*B* - பயிற்சியாளர் குழுவைச் சிறிய குழுக்களாகப் பிரித்து, அவர்களுக்கு வலைப் பயிற்சி அளித்தார்.
*C* - கமல் ஒரு துடுப்பையும் ஒரு பந்தையும் எடுத்து அவற்றை ஒரு பையில் வைத்தார்.
*D* - கமலின் குழு 4 விக்கெற்றுகளுக்கு 55 ஓட்டங்களை எடுத்தது.
*E* - பயிற்சியாளர் அவர்களைப் பக்கத்துக்கு ஆறு என்றவாறு இரு குழுக்களாகப் பிரித்து, ஒவ்வொரு பக்கத்திற்கும் 10 ஓவர்கள் என்றவாறு ஒரு சிநேகபூர்வமான ஆட்டத்தை அமைத்தார்.
*F* - கமல் விளையாட்டு மைதானத்திற்குத் தனது மோட்டர்ச் சைக்கிளில் சென்றார்.
*G* - கமல் அடுத்த ஆட்டத்தில் விக்கெற்றுக் காப்பாளர் ஆவார்.
*H* - பயிற்சியாளர் கமலின் குழுவை ஆட்டத்தில் வெற்றிபெற்ற குழுவாக அறிவித்தார்.
*I* - பயிற்சியாளர் குழுவுக்கு உடற் பயிற்சி அளித்த அதே வேளை கமலும் அதில் பங்குபற்றினார்.
*J* - ஆட்டத்தை மழை குழப்பும் வரைக்கும் விமலின் குழு 8 ஓவர்களில் 30 ஓட்டங்களைப் பெற்றது.

**57.** வலைப் பயிற்சி வரைக்குமான கூற்றுகளின் சரியான தொடரைத் தெரிந்தெடுக்க.
(1) *C, A, B* (2) *F, C, B* (3) *I, B, E* (4) *F, I, B* (5) *E, I, B*

**58.** பயிற்சியாளர் வெற்றிபெற்றவரை அறிவிப்பதற்கு இட்டுச் சென்ற நிகழ்வுகளுக்குரிய கூற்றுகளின் சரியான தொடரைத் தெரிந்தெடுக்க.
(1) *E, A, G* (2) *A, G, D* (3) *E, I, D* (4) *G, J, D* (5) *E, D, J*

● **59, 60** ஆகிய வினாக்கள் ஒவ்வொன்றிலும் மூன்று கூற்றுகளைக் கொண்ட ஐந்து குறுகிய பந்திகள் தரப்பட்டுள்ளன. அப்பந்திகளில் ஒன்றில் உள்ள மூன்று கூற்றுகளை மாத்திரம் ஒரு தருக்கத் தொடர்புடைமையைக் காட்டுமாறு மீளவொழுங்குபடுத்தலாம். ஒரு தருக்கத் தொடர்புடைமையைத் தருமாறு மீளவொழுங்குபடுத்தத்தக்க கூற்றுகளைக் கொண்ட பந்தியைத் தெரிந்தெடுக்க.

**59.** (1) மாமரங்கள் ஆண்டுக்கு இரு தடவைகள் காய்க்கின்றன. முந்திரிகை மரங்கள் ஆண்டுக்கு ஒரு தடவை காய்க்கின்றன. மாம்பழங்கள் முந்திரிகைப் பழங்களிலும் பார்க்கப் பெரியவை.
(2) நெல் வானம் பார்த்த பயிராகவும் பாசனப் பயிராகவும் பயிரிடப்படுகின்றது. நெல்லைச் சிறுபோகத்திலும் பெரும்போகத்திலும் பயிரிடலாம். சிறுபோகத்தில் நெல்லைப் பயிரிடுவதற்குப் பாசன நீர் கிடைத்தல் வேண்டும்.
(3) உப்பளங்களில் கடல்நீர் அல்லது கடனீரேரியின் நீர் உப்பு வயல்களுக்குப் பம்பப்படுகின்றது. உப்பின் பளிங்காக்கத்தைத் தொடங்குவதற்குத் தூளாக்கிய உப்பு சரியான கட்டத்தில் உப்பு வயலினுள்ளே தூவப்படுகின்றது. நீர் இயற்கைச் செயன்முறையில் சூரிய சக்தியினால் ஆவியாக்கப்படுகிறது.
(4) பிள்ளைகள் காலையில் பாடசாலைக்குச் செல்கின்றனர். பாடசாலைப் பிள்ளைகள் பொதுவாகப் பின்னேரத்தில் பொழுதுபோக்குச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். முன் பள்ளிப் பிள்ளைகளுக்குப் பொழுதுபோக்குச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கெனக் குறித்த நேரம் எதுவும் இல்லை.
(5) அரசாங்கம் தேனி வளர்ப்பை ஊக்குவிக்கின்றது. தேனீயின் தேன் உடனலத்திற்கு உகந்தது. தேன் ஒரு நற்காப்புப்பொருள் ஆகும்.

**60.** (1) விவசாயத்திற்குக் கணிசமான அளவு தொழிலாளர் உழைப்புத் தேவை. இப்போது விவசாயத்தில் பண்ணை இயந்திரத் தொகுதிகள் பயன்படுத்தப்படுகின்றன. கூலியாட்களை வேலைக்கு அமர்த்துவதிலும் பார்க்கப் பண்ணை இயந்திரத் தொகுதியைப் பயன்படுத்தல் மலிவானதாகும்.
(2) அம்புலன்சுச் சேவை அழைக்கப்பட்டது. இளைஞன் ஒருவன் புகையிரதத்தினால் மோதப்பட்டுள்ளான். பல களவுகளில் சந்தேக நபராகிய ஓர் இளைஞன் தற்கொலை புரிவதற்கு எத்தனித்துள்ளான்.
(3) பெண் பிள்ளை தனது சைக்கிளில் பாடசாலைக்குச் செல்வதற்கு வீட்டிலிருந்து புறப்பட்டாள். பெண் பிள்ளையின் தந்தை ஓர் ஆசிரியர் ஆவார். மகள் தந்தை படிப்பிக்கும் பாடசாலைக்குச் செல்கின்றாள்.
(4) தருண் நகரில் பிரசித்தி பெற்ற மோட்டர்ச் சைக்கிள் பழுதுபார்க்கும் நிலையம் ஒன்றின் பொறினுட்பர் ஆவார். தருண் வீட்டில் ஒரு சிறு தொழிலகத்தைக் கொண்டுள்ளார். கடமை முடிந்த நேரங்களிலும் தொழிலாற்றாத நாட்களிலும் தருண் வீட்டில் பழுதுபார்த்தற் பணியைச் செய்கின்றார்.
(5) ஆழ் கடல் மீன்பிடித் தொழில் பல இலங்கை மக்களுக்குத் தொழில்களை வழங்குகின்றது. இலங்கை ஐரோப்பிய நாடுகளுக்கு மீண்டும் மீனை ஏற்றுமதி செய்யத் தொடங்கியுள்ளது. நன்னீர் மீன்பிடித்தொழில் இலங்கையில் பல பாகங்களில் பொதுவாகக் காணப்படுகின்றது.

* * *